பக்கங்கள் 17 + 07

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 20 திங்கட்கிழமை 05.08.2024 | அதிர்வு 04

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட

## கட்டுப்பணம் செலுத்திய சரத் பொன்சேகா எம்.பி.



வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவ தற்குரிய கட்டுப்பணத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரான முன் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ரணில் அரசுக்கு தனிப்பெரும்பான்மை

## சரியான தீர்மானம் இல்லையேல் ‘மொட்டு’வில் 2 உறுப்பினர்களே மிஞ்சுவர் என்கிறார் பிரசன்ன

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலானஅரசுக்குத்தனிப்பெரும்பான்மை இருப்பதால் அடுத்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு அரசை நடத்துவதில் சிக்கல் இருக்காது என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். 04

# ஒரு கோடி 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி!

தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

இலங்கையில் எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க ஒரு கோடி 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலின்படி, ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்டவாக்காளர்களின் எண்ணிக்கை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. 04





# முன்னாள் கிரிக்கெட் வீரர் சஜித் கட்சியில் இணைவு!

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சிரேஷ்ட வீரர்களில் ஒருவரான ஹஷான் திலகரத்ன எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்துக்கு ஆதரவளிக்கும் நோக்கில் இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் மகளிர் அணியின் பயிற்றுவிப்பாளர்களாகவும் தற்போது அவர் கடமையாற்றி வருகின்றார்.

அவரது பாரியாரும் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஏற்பாட்டாளராகவும் கடமையாற்றி வரும் திருமதி அப்சாரி சிங்கபாகு திலகரத்னவும் இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டனர்.







## காதலனால் ஏமாற்றப்பட்ட அழகுக்கலை நிபுணர் உயிர்மாய்ப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பில் இளம் யுவதியொருவர் காதலனால் ஏமாற்றப்பட்ட நிலையில் தற்கொலை செய்துள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த அழகுக்கலை நிபுணரான லக்சிக்கா (வயது 24) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி யுவதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காதலனான பொலிஸ் உத்தியோகத்தரால் ஏமாற்றப்பட்ட நிலையில் சமூக வலைத்தளங்களில் காதலனின் புகைப்படங்களைப் பகிர்ந்து தான் ஏமாற்றப்பட்டுள்ளதாகக் கூறி, பதிவுகள் வெளியிட்டு வந்திருந்தார்.

காதலன் தன்னை ஏமாற்றியதாகப் பொலிஸாரிடம் அந்த யுவதி முறைப்பாடும் பதிவு செய்திருந்தார்.

இந்நிலையில், மேற்படி யுவதி உயிரை மாய்த்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# ஐ.தே.க. - சு.கவை மீண்டும் கட்டியெழுப்பவே முடியாது!

## றொஷான் ரணசிங்க எம்.பி. கூறுகின்றார்



ஐக்கிய தேசியக் கட்சியையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் மீண்டும் கட்டியெழுப்ப முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் றொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பொலனறுவையில் இன்று ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு திருடர்களை விரட்டி திருடர்களைப் பிடிப்பதற்காக மக்களை நியமித்தது. அது நடக்காத காரணத்தால் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக நியமித்தது.

இந்த நாட்டில் ஊழல், மோசடிகளுக்கு இனி இடமில்லை. புதிய வேலைத் திட்டத்துடன் இந்த நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக உலகம் அறிந்த ஒருவரை முன்னிறுத்த வேண்டும். பொதுஜன பெரமுனவைக் கட்டியெழுப்பக் கடுமையாக உழைத்தவர்கள் இருக்கின்றார்கள். அத்தகைய ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பது நல்லது.

நான் அமைச்சுப் பதவிக்காக முன்னும் பின்னுமாக குதிப்பவர் அல்லன். நாட்டின் எந்த மாவட்டத்தில் இருந்தும் சுதந்திரமாக நின்று நாடாளுமன்றம் செல்வேன்.” - என்றார்.

# டயனாவுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி



நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த மனு இன்று பிரிதி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

அதன்பின், 3 பேர் கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதிகளின் உடன்பாட்டின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மனுவை தள்ளுபடி செய்ய முடிவு செய்யப்பட்டது.

வெலிகம முன்னாள் மேயர் ரெஹான் ஜயவிக்ரமவினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



# பருத்தித்துறையில் கிணற்றுக்குள் வீழ்ந்து ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பளைப் பகுதியில் கிணற்றுக்குள் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை, தும்பளை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# அர்ச்சுனாவுக்கான பிணை மனு நிராகரிப்பு

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் குழப்பம் ஏற்படுத்தியதான வழக்கில் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவின் பிணை மனு மன்னார் நீதிவான் நீதிமன்றத்தால் இன்று நிராகரிக்கப் பட்டது.

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்குள் அத்துமீறி உள் நுழைந்து குழப்பம் ஏற்படுத்தியதான குற்றச்சாட்டில் எதிர்வரும் 7ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வைத்தியர் அர்ச்சுனாவுக்குப் பிணை வழங்க வேண்டும் எனக் கோரி இன்று சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் ஒரு நகர்த்தல் பத்திரத்தைத் தாக்கல் செய்தார்.

இதன்போது சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தனது சமர்ப்பணத்தில் வைத்தியர் அர்ச்சுனா ஒரு சிறுநீரக நோயாளி என்ற அடிப்படையில் பிணை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இதன்போது வைத்தியசாலை சார்பில் 22 சட்டத்தரணிகள் சட்டத்தரணி டெனீஸ்வரன் தலைமையில் ஆஜராகி வைத்தியர் அர்ச்சுனாவுக்குப் பிணை வழங்குவதைக் கடுமையாக ஆட்சே பித்தனர்.

இதனையடுத்துப் பிணை மனு நிரா கரிக்கப்பட்டது.

# யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

யானை தாக்கிப் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

நொச்சியாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எஹதுவாகம பகுதியில் யானை தாக்கியதில் மேற்படி குடும்பஸ்தர் காயமடைந்து நொச்சியாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அம்பகஹவெவ, நொச்சிகம பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது தோட்டத்தை வனவிலங்குகளிடம் இருந்து பாதுகாக்கச் சென்றுவிட்டு வீடு திரும்பும்போதே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# நீரில் மூழ்கி இளைஞர் சாவு!

நீரில் மூழ்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சமனல குளம் அணைக்கட்டுக்கு அருகில் நீரில் மூழ்கியே மேற்படி இளைஞர் உயிரிழந்துள்ளார் என்று பலாங் கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வென்னப்புவ, கொலிஞ்சாடிய பகுதியைச் சேர்ந்த உடகம மனன் னலகே கமல் பெர்சரா என்ற 29 வயது டைய நபரே உயிரிழந்துள்ளார்.

கொரிய பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்த நிலையில் நேற்று மாலை சமணல ஏரி அணைக்கட்டுக்கு அருகில் உள்ள குளத்தில் இளைஞர்கள், ஆசிரியருடன் நீராடச் சென்றுள்ளனர். இதன்போது நீராடச் சென்ற ஒருவர் காணாமல்போன நிலையில், அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கட்டுப்பணம்...

னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. இன்று செலுத் தினார்.

சுயாதீன வேட்பாளராகவே அவர் போட்டியிடவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெற வுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடு வதற்காக இதுவரை 10 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தி யுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ரணில்..

சரியான தீர்மானம் எடுக்கப்படாவிடின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்களே எஞ்சுவார்கள் என்றும் அவர் கூறினார்.

திவுலபிட்டிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

நாட்டில் தற்போது புதிய அரசியல் கலாசாரம் ஏற்பட்டுள்ளது என்றும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க மாபெரும் வெற்றி பெறு வார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ஒரு கோடி...

அதன் விபரம் வருமாறு:-

1. கொழும்பு - 17,65,351
2. கம்பஹா - 18,81,129
3. களுத்துறை - 10,24,244
4. கண்டி - 11,91,399
5. மாத்தளை - 4,29,991
6. நுவரெலியா - 6,05,292
7. காலி - 9,03,163
8. மாத்தறை - 6,86,175
9. அம்பலாந்தோட்டை - 5,20,940
10. யாழ்ப்பாணம் - 5,93,187
(யாழ்ப்பாணம் மாவட்டம் - 4,92,280
கிளிநொச்சி மாவட்டம் - 1,00907)
11. வன்னி - 3,06,081
(வவுனியா மாவட்டம் - 1,28,585
மன்னார் மாவட்டம் - 90,607
முல்லைத்தீவு மாவட்டம் - 86,889)
12. மட்டக்களப்பு - 4,49,686
13. திகாமடுல்ல - 5,55,432
14. திருகோணமலை - 3,15,925
15. புத்தளம் - 6,63,673
16. குருநாகல் - 14,17,226
17. அநுராதபுரம் - 7,41,862
18. பொலனறுவை - 3,51,302
19. பதுளை - 7,05,772
20. மொனராகலை - 3,99,166
21. இரத்தினபுரி - 9,23,736
22. கேகாலை - 7,09,622

# கல்வி, பொருளாதார, சமூக மேம்பாட்டுக்குத் துணை நிற்பேன்

## நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன்



**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டத்தின் கல்வி சமூக மேம்பாடு, பொருளாதார ரீதியான முன்னேற்றத்தை கொண்டு செல்ல மக்களுக்காக என்றும் துணை நிற்பேன் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள திரியாய் பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாங்கள் கற்கும் காலங்களில் மின்சாரம் இருக்கவில்லை. அப்போது எனது தந்தை யாழ்ப்பாணத்துக்கு கல்வி கற்பதற்காக அனுப்புவதாக இருந்த போதிலும் அங்கு செல்லாமல் இங்கு கற்று முதல் பல்கலைக்கழகம் சென்றேன். இங்கிருந்து எனது மக்களுக்குச் சேவையாற்றுவேன்.

நாடாளுமன்ற உறுப்பிர்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் 2 கோடி ரூபாவை அபிவிருத்தி பணிக்காக பெற்றுள்ளேன். திரியாய் மாத்திரம் அல்ல தென்னை மர வாடி தொடக்கம் வெருகல் வரை அபிவிருத்தி பணிகளை செய்து மாவட்டத்தை முன்னுக்கு கொண்டு வருவேன். என்னாலான சகல உதவிகளும் செய்வதற்கான தயார் நிலையில் உள்ளேன்.- என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் ஆரம்பத்தில் இருந்து...!

துன்பம் - கஷ்டம் - நெருக்கடி - நேரும் போதுதான் நட்பும், உறவும், உதவும் எண்ணமும் தெரியும் என்பர். இடுக்கண் வரும்போதுதான் உண்மையானவர்களை அடையாளம் காணக் கூடியதாக இருக்கும்.

மொட்டுக் கட்சியினருக்கு - ராஜபக்ஷகளுக்கு - அந்தக் காலம் மீண்டும் வந்திருக்கிறது.

அதிகாரமும் வலிமையும் இருந்த போது அருகில் இருந்தவர்கள் எவரும் இப்போது இல்லை. எங்கிருந்தோ வந்த ரணிலுக்குப் பின்னால் பெரும் பாலானோர் ஓடி விட்டார்கள்.

ஆனால் ராஜபக்ஷகளுக்கு இது புதியதல்ல. மீண்டும் ஆரம்பத்தில் இருந்து கட்டி எழுப்பும் வல்லமை உடையவர்கள் அவர்கள். என்ன, தென்னிலங்கை மக்கள் மத்தியில் வசீகரமும் முக செல்வாக்கும் கொண்ட மஹிந்த ராஜபக்ஷ தளர்ந்து விட்டார். வயதும் ஆயாசமும் தளர்வு நிலையும் கொண்ட அவரை முன்னிறுத்திக் கட்சியை மீண்டும் கட்டி எழுப்புவது கஷ்டமானதாக இருக்கலாம். அதைச் செய்வதற்கு பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

நரித் தந்திரசாலியான ரணில் விக்கிரமசிங்கவை அரவணைத்து, அது வரை அரசியல் குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டு கிடந்த அவருக்கு ஜனாதிபதி பதவியோடு அரசியல் மறுவாழ்வும் அளிக்க முற்பட்ட போது இந்த நிலைமை வரும் என்று ராஜபக்ஷக்கள் கணிப்பிடத் தவறி விட்டனர். ரணிலிடம் அவர்கள் பாடம் படிக்க வேண்டிய நிலைமை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை செங்கல் செங்கலாக உடைத்துப் பிரித்து, அவற்றைப் பயன்படுத்தி பொதுஜன பெரமுனவைக் கட்டி வளர்த்தனர் ராஜபக்ஷக்கள். இப்போது அவர்களின் மொட்டுக் கட்சியை பிரித்து மேய்ந்து, தமது கையை வலுப்படுத்திக் கொள்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் குருவான அவரது மாமனார் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை அரசியலில் 'கிழட்டு நரி' என்பார்கள். அதே செல்லப் பேர்தான் மருமகன் ரணில் விக்கிரமசிங்கவுக்கும். அவரையும் இப்போது பலரும் அரசியலில் கிழட்டு நரி என்று தான் அழைக்கின்றார்கள்.

இலங்கை அரசியலிலும் பாட்டி வடை சுட்ட பாலர் வகுப்புக் கதைதான் கனகச்சிதமாக நடக்கின்றது போலும்.

ராஜபக்ஷக்களில் ஒருவரான பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக இருந்த போது அவரது அரை ஆங்கில மொழி பிரயோகத்துடனான தொலைக்காட்சி பேட்டியை அடுத்து அவருக்கு 'கப்புடு' (காகம்) என்று பட்டப் பெயர் சூட்டப்பட்டமை பலருக்கு தெரிந்திருக்கும்.

இந்தக் காகம் நரியிடம் ஏமாந்த பாட்டி வடை சுட்ட கதைதான் இங்கும். காக்கைத் தரப்பான ராஜபக்ஷக்களிடம் இருந்து நரித் தந்திரசாலியான ரணில், பாட்டியின் வடை போன்ற ஜனாதிபதிப் பதவியை தந்திரமாக பிடுங்கிக் கொண்ட பின்னர் நடக்கின்ற விடயங்கள்தான் இப்போது அரசியலில் அரங்கேறுகின்றன. அதை வைத்துக்கொண்டு ரணில் அடிக்கும் லூட்டியை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டு ராஜபக்ஷக்களுக்கு.

எது, எப்படி என்றாலும் 2015 இலும் இதுதான் ராஜபக்ஷக்களுக்கு நடந்தது. அதிகாரம் பறிபோனது. அவர்களுடன் நின்றவர்கள் எல்லோரும் ஓடித்தப்பினர். நாமல் ராஜபக்ஷ நீண்ட காலம் விளக்கமறியல் சிறைவாசம் கூட அனுபவித்தார்.

இப்போதும் ராஜபக்ஷக்களைச் சூழ இருந்த அரசியல்வாதிகள் எல்லோரும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு புதிய ஜனாதிபதி பதவி ராஜபக்ஷக்கள் பக்கம் இல்லை என்றதும், அவர்கள் பக்கத்திலிருந்து ஓட்டம் பிடிக்கத் தொடங்கி விட்டனர்.

அவரவர்களுக்கு அவரவர்களின் பிரச்சினைகள், வழக்குகள், விசாரணைகள் என்று பல சில்லெடுப்புகள் உண்டு. ரணில் பக்கம் பாய்ந்த பெருங்கூட்டத்தை அப்படியே கை கழுவி விட்டு, தங்கள் கைங்கரியத்தை புதிதாக கட்சியில் ராஜபக்ஷக்கள் ஆரம்பிக்க வேண்டியதுதான்.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கோணாவத்தை பிரதேச குழு கூட்டம்





(எம். எப். றிபாஸ்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை கோணாவத்தை பிரதேச வட்டாரக் குழு கூட்டம் மத்திய குழுத் தலைவர் ஹம்சா சனுஸ் தலைமையில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதேச அமைப்பாளர் ஏ.கே. அமீரின் நெறிப்படுத்தலின் கீழ் இடம்பெற்ற நிகழ்வுக்கு கட்சியின் உயர்பீட உறுப்பினரும், பிரதி தேசிய அமைப்பாளருமான தாஹீர், பிரதி செயலாளர் நாயகம் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸீல் உட்பட கட்சி முக்கியஸ்தர்களும் பிரமுகர்களும் கலந்து கொணடனர்.

கடந்த காலங்களை விட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சி பெரிதும் உயர்வடைந்துள்ளதுடன் அதிகமான ஆதரவாளர்களும் கட்சியில் இணைந்து கொண்டு கட்சியின் வளர்ச்சிக்காக தங்களது பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை அட்டாளைச்சேனைப் பிரதேசத்துக்கு உட்பட்ட ஒலுவில், பாலமுனை, ஆலங்குலம், அஸ்றப் நகர், கோணாவத்தை, தீகவாபி, தைக்கா நகர் போன்ற பிரதேசங்களில் இருந்து ஆயிரக் கணக்கான ஆதரவாளர்கள் எதிர்காலத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர் என்றும் அமைப்பாளர் அமீர் தெரிவித்துள்ளார்.

# மாற்றுத் திறனாளிகளின் ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாற்றுத் திறனாளிகளின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் மாத்தறை அமெரிக்கன் கோணர் இளைஞர் மன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் நிகழ்வொன்றை ஒழுங்கு செய்திருந்தனர்.

பன்முகத்தன்மை, சமத்துவம், உள்ளடக்கம், பிரதிநிதித்துவம் மற்றும் சொந்தமான உணர்வைத் தழுவுவது உலகத்தைப் பற்றிய தமது கருத்துக்களை ஆழமாக மாற்றும் போன்ற விடயங்களை தழுவியதாக அமைந்திருந்த இந்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளுக்கான கலை மற்றும் இசை பட்டறையை என்பன இடம்பெற்றன.

இந்த முன்முயற்சி படைப்பாற்றலை ஊக்குவித்தது, தடைகளை உடைத்து, வேறுபாடுகளை மதித்து ஏற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது.






# முஸ்லிம்களது சமகால அரசியல் வகிபாகம் தொடர்பில் ஆராய்வு

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் சமூகத்தின் சமகால அரசியல் வகிபாகம் மற்றும் கல்முனையின் எதிர்கால நகர்வுகள் தொடர்பாகப் பொது மக்களைத் தெளிவூட்டும் பொதுக் கூட்டம் கல்முனை கடற்கரைப் பள்ளி முன்பாக இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு பிரதான பேச்சாளராக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், உள்ளூராட்சி மாகாண சபைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்துகொண்டார்.

அவர் தேசிய அரசியலில் முஸ்லிங்களின் வகிபாகம், ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு, கல்முனை அரசியலில் இடம்பெறும் சதித்திட்டங்கள், அபிவிருத்தி திட்டங்களின் அடைவுகள், கிழக்கு மாகாண முஸ்லிங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கடந்த அரசாங்கத்தில் முஸ்லிங்கள் சந்தித்த சவால்கள், ஜனாஸா எரிப்பின் மூலம் சந்தித்த சவால்கள், கல்முனை முஹையத்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் புதிய நம்பிக்கையாளர் நியமனம் என பல்வேறு பட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இந்தக் கூட்டத்தில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.ஆர்.அமீர், எம்.ஏ. கலீலுர் ரஹ்மான் ஆகியோரும் உரையாற்றினர். கல்முனை மாநகர சபை முன்னாள் பிரதி மேயர் ஏ.ஏ. பஷீர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கல்முனை மத்திய குழு உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# இணைந்த கரங்கள் அமைப்பால் விழிப்புலனற்றோருக்கு உதவிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வன்னி விழிப்புலனற்றோருக்கு இணைந்த கரங்கள் அமைப்பின் ஊடாக ஒரு தொகுதி உலருணவுப் பொதிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு ஒந்தாச்சிமடத்தைச் சேர்ந்த கஜேந்திரன், ரஞ்சினி தம்பதியினரின் குழந்தைகளின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஆஸ்ரேலியாவில் வசிக்கும் குழந்தைகளின் மாமாவால் இந்த உதவி வழங்கப்பட்டது.



கிளிநொச்சியில் இயங்கிவரும் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தை சேர்ந்த 30 குடும்பங்களைத் தெரிவு செய்து, ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இணைந்த கரங்கள் சார்பாக காந்தன், விவேக் ஆகியோர் கலந்து கொண்டு அவர்களுக்கு இதனை வழங்கி வைத்தனர்.




# தாய், குழந்தை மருத்துவமனைகளை மேம்படுத்துவதற்கு வழிகாட்டல் பயிற்சி

( வி.ரி. சகாதேவராஜா)

தாய் குழந்தை நேய மருத்துவமனைகளை உருவாக்க மற்றும் மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்வு சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலில் நடைபெற்றது .

இந் நிகழ்வு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு டாக்டர். கே கிரிசுதன், தாய், சேய் நல வைத்திய அதிகாரி மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர்கள், அத்தியட்சகர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் வளவாளராகக் கருத்துரைத்த பேராசிரியர் எம். திருக்குமார் கருத்தரித்து முதல் தடவையாக சிகிச்சை நிலையத்துக்கு வரும் போதே அவர்களுடன் நடந்துகொள்ள வேண்டிய முறை தொடர்பிலும் தாய் குழந்தை நேய வைத்தியசாலைகளில் தொடர்பாடலின் அவசியம் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.



# இராகலை தேசிய பாடசாலை கரபந்தாட்டத்தில் முதலிடம்!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மாகாண மட்டத்தில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கரபந்தாட்ட போட்டியில் வலப்பனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட இராகலை உயர் தேசிய பாடசாலையின் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் கரபந்தாட்ட அணி மத்திய மாகாணத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவித்த ஆசிரியர்கள் மற்றும் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.



# முன்பள்ளி சிறுவர்களின் கண்காட்சி





(ஹஸ்பர்)

திருகோணமலை முள்ளிப்பொத்தானை சல்மா முன்பள்ளி சிறுவர்களின் பாரம்பரிய நிகழ்வு தொடர்பிலான கண்காட்சி அண்மையில் இடம் பெற்றது.

இலங்கை பல்லின சமூகத்தின் கலாச்சார ஆடைகள் மற்றும் பண்டிகை உணவு பரிமாறும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.அன்வர்தீன் உட்பட ஆசிரியர்கள், பெற்றார்கள் கலந்து கொண்டனர்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# பழைய மாணவர் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்!!

**(எம்.என்.எம்.அப்ராஸ்)**

கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் பாடசாலையின் அதிபர் எம்.ஐ. அப்துல் ரசாக் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றன.

இதன் போது நிகழ்வின் ஆரம்பமாக பாடசாலையின் நிலை தொடர்பில் அதிபர் எம்.ஐ.அப்துல் ரசாக் கருத்துத் தெரிவித்தார்.

பாடசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு பணிகள் தொடர்பாக பழைய மாணவர்கள் மத்தியில் ஆராயப்பட்டதன் பின்னர் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

பழைய மாணவர் சங்கத் தலைவராக பாடசாலை அதிபர் எம்.ஐ.அப்துல் ரசாக், உபதலைவராக எஸ்.எம். சப்ராஸ், செயலாளராக கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் உதவி அதிபர் எம்.எச்.ஐ. இஸ்ஸத், பொருளாளராக விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எம்.ஏ.எம்.ரியால், ஆலோசகராக கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஐ.எம்.அப்துல் மனாப் ஆகியோருடன் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.




# இலங்கை பாடசாலைகள் கிறிக்கெட் சுற்று; முதல் சுற்றில் கல்முனை சாஹிறா வெற்றி

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கை பாடசாலைகள் கிறிக்கெட் சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான டிவிஷன் 3, 17 வயது கடினபந்து கிறிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரி அணி, அம்பாறை பதியத்தலாவ தேசிய பாடசாலை அணியுடன் முதலாவது சுற்றின் முதலாவது போட்டியில் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்படுத்தாடிய பதியத்தலாவ தேசிய பாடசாலை அணியினர் 38.3 ஓவர்கள் முடிவில் சகல விக்கட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை பெற்றனர்.



பதிலுக்கு துடுப்படுத்தாடிய கல்முனை ஸாஹிறா அணி 17.2 Over களில் 8 விக்கட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களை பெற்று 2 விக்கட்டுக்களால் முதலாவது சுற்றின் முதலாவது போட்டியில் வெற்றி பெற்றனர்.

# தேர்தல் நெருக்கடிக்குள்

# வீதிக்கு இறங்கும் பட்டதாரிகள்...!





(ஹஸ்பர் ஏ. ஹலீம்)

நாட்டின் பொருளாதார நெருக்கடி ஒரு பக்கம் இருக்க இலங்கையில் வேலையில்லா பட்டதாரிகளின் நிலமை ஒரு பக்கம் அரசுக்குச் சவாலாக உள்ள நிலையில் வீதிப் போராட்டங்களும் இடம் பெற்று வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையில்லா பட்டதாரிகள் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியும் இலங்கையில் தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இன்னும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவுள்ளனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் இருந்து தங்களது பட்டப்படிப்புக்களை முடித்துவிட்டு அரச துறையில் தொழில்களை எதிர்பார்த்து அழுத்தங்களை கொடுத்தும் பல்வேறுபட்ட வீதிப் போராட்டங்கள் தொடர் போராட்டங்கள் ஊடாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

தற்போதைய அரசு வேலையில்லா பட்டதாரிகளுக்கான அரச துறையில் நியமனங்கள் வழங்குவது தொடர்பில் பெருமளவில் கரிசனை காட்டவில்லை என்பது புலனாகிறது.

இலங்கையில் கல்விக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அரச பல்கலைக்கழகங்களில் பட்டங்களை முடித்தும் வீட்டில் பலர் தனியார் துறையை விரும்பாத நிலையில் முடங்கிக் கிடக்கின்றனர் அதிலும் ஆண்களை விட பெண்களின் தொழிலற்ற வீதம் அதிகரித்து காணப்படுகிறது.

அண்மையில் வேலையில்லா பட்டதாரிகள் சங்கம் ஊடாக மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னால் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தனர். கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் ஒரு நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்புக்கு விஜயம் செய்த வேளை வீதி ஊர்வலமாக சென்று மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இது தவிர திருகோணமலை மாவட்டத்தில் வேலையில்லா பட்டதாரிகள் கிண்ணியாவில் ஊடகச் சந்திப்பு மூலம் அரசுக்கு கோரிக்கையாக தங்களுக்கு நியமனங்களை வழங்க வேண்டும் எனவும் அழுத்தங்களை கொடுத்தனர். அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகக் கோரிக்கை விடுத்த போதிலும் சரியான முடிவுகள் கிடைக்கவில்லை. கிழக்கு மாகாண ஆளுனர் செயலக முன்றலில் இந்தப் பட்டதாரிகள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

2019 இல் அரச நியமனங்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களை வழங்கியிருந்த போதிலும் அதன் பின்னர் அரச துறையில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கான நியமனங்களை வழங்கவில்லை. இதனால் கடந்த ஐந்து வருடங்களில் சுமான் 50 ஆயிரம் பட்டதாரிகள் நாடு தழுவிய ரீதியில் அரச பல்கலைக்கழகங்களில், அரச துறை சார் நிறுவனங்களில் பட்டம் முடித்தவர்கள் தொழில் இன்றி உள்ளார்கள்.

தொழில்வாண்மையான பட்டதாரிகள் வைத்தியத் துறை, பொறியியல் துறையில் பல நியமனங்கள் வழங்கப்பட்ட போதிலும் கலைத் துறை சமூக விஞ்ஞான பட்டதாரிகள் அரச துறையில் வேலை வாய்ப்புப் பெறுவது கடினம். ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சைகளுக்கு தெரிவுகள் கலைத் துறையில் குறிப்பிட்ட சிலரே தெரிவாகின்ற போதிலும் ஏனைய பட்டதாரிகள் தொழில் இன்றி காணப்படுனகின்றனர்.

அரச துறை நியமனங்களை நம்பி 45 வயதைத் தாண்டிய நிலையில் கிழக்கு மாகாணத்தில் மாத்திரமல்ல ஏனைய மாகாணங்களிலும் உள்ளனர். அரச சேவை மக்களுக்கு வினைத்திறனுடன் வழங்க வேண்டும் என்ற அரச கொள்கை காணப்பட்டாலும் பல்கலைக்கழகப் பட்டங்கள் முடித்து உள்வாரி வெளிவாரியான பட்டங்களை கற்று திறம்பட வெளியேறிய போதிலும் நியமனங்களை பெறுவது தற்போதைய சூழ்நிலைமில் எண்டாக் கணியாகவே காணப்படுகிறது.

அரசு தேர்தலை இலக்காக கொண்டு பல திட்டங்களை செய்து வாக்குகளுக்காக திசை திருப்ப பல உத்திகளை கையாளுகின்ற போதிலும் வேலையில்லா பட்டதாரிகளைக் கவனத்தில் கொள்ளவில்லை. இதனால் சமூக பொருளாதார பிரச்சினை மிக மோசமாக பாரிய பின்னடைவுக்குள் தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய அரசில் பொருளாதார நெருக்கடியில் அரச ஊழியர்களும் பல்வேறு துன்பங்களை பொருளாதார ரீதியாக அனுபவிக்கிறார்கள். பலருக்கு மாதாந்த சம்பளம் பெற்றாலும் அதற்கு மேல் செலவு கடன் தொகை என உளரீதியாக சிந்திக்க தூண்டுவதுடன் சமூக பொருளாதார தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது.

திருகோணமலை மாவட்ட பட்டதாரிகள் அண்மையில் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்ததுடன் வீதிப் போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர் இதன் போது இவ்வாறு தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

“எங்களது வேலையில்லா பிரச்சினையை ஜனாதிபதி செவிமடுக்க வேண்டும்” இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசுவதற்காக ஊர் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாங்கள் நாடி உள்ளோம்.

இந்த அரசு மிக விரைவில் எங்களது வேலையில்லாப் பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையைச் சரியான முறையில் தீர்க்காவிடின் வீதிக்கு இறங்கிப் போராடுவோம்.

900 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எந்த விதமான வேலையும் இல்லாமல் எங்களது மாவட்டத்தில் வீதிகளிலும் ஏனைய இடங்களிலும் இருக்கின்றனர்.

எமது வயதை அடிப்படையாகக் கொண்டாவது நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுங்கள்.

உள்வாரி, வெளிவாரி, வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் என எவ்வித பாகுபாடும் இன்றி எங்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்று தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

பெண்ணுரிமை பெண் சமூகம் பெண்களுக்கான பாதுகாப்பு சகலதையும் வழங்கக் கூடிய ஒரு நாடு அப்படியாக இருந்தும் எங்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற கால அவகாசம் மிகவும் அதிகமாக இருக்கின்றது.

உரிய வயதில் உரிய வேலை வாய்ப்புகளை தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று அரசாங்கத்திடம் மேலும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கல்விக் கொள்கையில் மாற்றங்காண வேண்டும். அரசின் புதிய கொள்கைத் திட்டங்கள் ஊடாக வீதிக்கு இறங்கி போராட முடியாத கொள்கைகளாக இருக்க வேண்டும் அப்போது தான் வேலையில்லா பட்டதாரிகளுக்கான சுபீட்சமான எதிர்காலம் கிட்டும்.



# முன்பள்ளி ஆசிரியர் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியம்!



(பழுவூரான்)

மாணவர்களைப் பாடசாலைக்கு செல்வதற்குத் தயார்படுத்தி சமூக நீரோட்டத்தில் இணைக்கும் அளப்பெரிய பணிகளை மேற்கொள்ளும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் எனத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான பூபால பிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக் களப்புமாவட்டஅபிவிருத்திக்குழுத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் பட்டிப்பளை அரசடித்தீவு விக்னேஸ்வரா முன்பள்ளிப் பாடசாலைக்காகக் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட உபகரணத் தொகுதியைக் கையளிக்கும் நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:–

சமூகத்தில் பெற்றோருடன் இருக்கின்ற குழந்தைகள் சமூக நீரோட்டத்திற்கு செல்கின்ற முதல் படியாக பாலர் பாடசாலைகள் அமைந்திருக்கின்றன.

சமூக உணர்வு, கல்வி கற்பதற்கான ஆர்வம், சமூகத்தில் வாழக்கூடிய நிலைமைகளை உணர்த்தி சமூகத்தில் நற்பிரஜைகளை உருவாக்கும் ஆரம்பப் பணியை முன்பள்ளி ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

இவ்வாறு யுத்த காலத்திலும் அதன் பின்னரும் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் கற்பித்துக் கொண்டிருந்த முன்பள்ளி ஆசிரியர்களையும் முன்பள்ளி பாலர் பாடசாலைகளையும் ஒன்றிணைத்து சமூக அந்தஸ்தையும் அரச அங்கீகாரத்தையும் வழங்கும் நோக்கோடு சிவநேசதுரை சந்திரகாந்தன் முதலமைச்சராக இருந்த போது முதன் முதலாகக் கொண்டு வரப்பட்ட நியதிச் சட்டம் பாலர் பாடசாலை பணியக நியதிச் சட்டமாகும்.

அதன் மூலமே பாலர் பாடசாலைகளுக்கான அங்கீகாரம் கிடைத்ததுடன் அந்த ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டு மேலதிக கற்பித்தலுக்கு உரிய பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இதன்போது மாதாந்தம் சிறிய கொடுப்பனவாக நாலாயிரம் ரூபா உறுதிப்படுத்தப்பட்டது.

இது வாழ்க்கைச் செலவை நடத்துவதற்கு போதுமானதாக அமையாத போதும் அரச அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது.

இந்த நிலையில் இந்தக் கொடுப்பனவை அதிகரிக்கச் செய்வதுடன், நாம் கிழக்கின் தலைமைகளை மீண்டும் மாகாண சபை அதிகாரங்களை கையகப்படுத்தும் போது இந்த ஆசிரியர்கள் சமூக, பொருளாதார நீரோட்டத்தில் வாழக்கூடிய அளவுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். அத்தோடு பாலர் பாடசாலைகளுக்கான புறச்சூழல்களும், அகச்சூழல்களும் புனரமைக்கப்பட்டு சின்னஞ்சிறார்கள் விரும்பிக் கற்கக் கூடிய போட்டிமிக்க உலகத்தில் சவால்களுக்கு மத்தியில் முகங்கொடுக்கக் கூடிய கற்பித்தல் முறையுடன் அதற்கான சூழலும், சர்வதேசத்துடன் போட்டி போடக்கூடிய அளவுக்குத் தகுதியான முன்பள்ளிகள் அமைத்து கொடுப்பதற்கான திட்டங்கள் எம்மிடம் இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் முன்பள்ளிப் பாலர் பாடசாலை, மாகாணப் பணிமனை உள்ளிட்ட நிர்வாகங்களில் வேகப்படுத்துவதற்கான நிர்வாக சுற்றோட்டத்திலும் மாற்றங்களை கொண்டு வருவதும் எமது திட்டமாக இருக்கின்றது.

கல்விப் புலம் சார்ந்து சூழலை உருவாக்குவதன் ஊடாக தன்னிறைவுள்ள தலைமைத்துவப் பண்புகளை சமூகத்தில் வளர்ப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பதற்கு நாம் என்றும் பின் நிற்கப் போவதில்லை. ஆசிரியர் என்கின்ற நாமத்தை மாத்திரம் வைத்து கொண்டு பொருளாதார ரீதியாக பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்ற முன்பள்ளிப் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் வலுவளவினையும் பொருளாதார வலுவாக்கத்தினையும் மேற்கொள்வோம்.

இன்றைய கால கட்டத்தில் பாலர் பாடசாலைக்கு முன்னுதாரணமாக இப் பாடசாலைகள் திகழ வேண்டும் என்பதற்காக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒலிபெருக்கிச் சாதனங்கள் வழங்கப்படுகின்றன.

அதே போன்று இவர்களுக்கான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் விரைவில் செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.– என்றார்.

இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பட்டிப்பளைப் பிரதேசக் குழுச் செயலாளரும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான ம.குகநாதன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அரசியல் துறைச் செயலாளர் ஞானம், பிரதேச இளைஞர் அணிச் செயலாளர் சி.புலக்ஷன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை யார் சதி செய்தாலும் கொல்ல முடியாது



## கலீலூர் ரஹ்மான் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

இஸ்மாயில் தஹ்னியை கொடூரமாகவும் கோழைத்தனமாகவும் கொன்றது போல் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை யார் சதி செய்தாலும் கொல்ல முடியாது என்பதை இஸ்ரேலியர்களும், அவர்களுக்கு ஆதரவானவர்களும் தெரிந்து கொள்ளவேண்டும்.

பாலஸ்தீன விடுதலைக்காகத் தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் தியாகம் செய்தார் இஸ்மாயில் ஹனி. அத்தகைய மாவீரனின் மரணத்துக்காக முஸ்லிம் பள்ளிவாசலில் காயீப் ஜனாஸா தொழுகையில் ஈடுபட்டு அன்னாருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் பெரிய சொர்க்கம் கிடைக்க முஸ்லிங்கள் கையேந்தி பிரார்த்திப்போம்.

ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலூர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

ஹமாஸ் என்பது பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்காக உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பாகும். அதன் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனியே, ஜனநாயக நாடு என்று அழைக்கப்படும் இஸ்ரேலின் ஆதரவுடன் ஒரு கோழைத்தனமான ட்ரோன் பயங்கரவாத தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஈரானின் புதிய அதிபரின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள ஈரான் வந்த இராஜதந்திர விருந்தினருக்கு ஈரான் இஸ்லாமிய குடியரசு உரிய பாதுகாப்பு வழங்கவில்லை என சிலர் குற்றம்சாட்டி வருகின்றனர். இந்த கொலையை இஸ்ரேல் எவ்வளவு திட்டமிட்டுள்ளது என்பதை நாம் இங்கு காணலாம்.

இந்த கொலையின் மூலம், பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் இருந்து ஈரானையும் அவர்களின் ஆதரவாளர்களையும், ஹிஸ்புல்லா மற்றும் ஹூதி போராளிக் குழுக்களில் இருந்து அகற்றி, ஈரானை முஸ்லிம் உலகில் இருந்து துரோகியாகத் தனிமைப்படுத்த இஸ்ரேல் நம்புகிறது.

திரைக்குப் பின்னால், மத்திய கிழக்கில் உள்ள சில அரபு ஷேக்குகள் இஸ்ரேலில் அந்த நம்பிக்கையை மலரச் செய்ய சதி செய்து கொண்டிருக்கிறார்கள். ஈரான் மற்றும் அவர்களின் ஹிஸ்புல்லா மற்றும் ஹூதி படையினர் தங்கள் மத்திய கிழக்கு கொடூர அரசுகளுக்கு எதிராக எதிர்காலங்களில் சவால் விடக்கூடும் என்பதே இதற்குக் காரணம்.- என்றுள்ளது.




# கல்முனை அல்- பஹ்றியா வித்தியாலய ஆய்வுகூட மேம்பாட்டுக்காக நிதி ஒதுக்கீடு

(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் முயற்சியின் பயனாக ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் கல்முனை கல்வி வலய அல்- பஹ்றியா மகா வித்தியாலயத்துக்கு விஞ்ஞான ஆய்வுகூட மேம்பாட்டுக்காக 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபர் எம்.ஏ சலாம் தலைமையில் நடைபெற்ற இந்த நிதி கையளிக்கும் நிகழ்வுக்கு எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிதி ஒதுக்கீட்டு ஆவணத்தை கையளித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். நியால் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார். கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகருமான எம்.ஏ. கலீலூர் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாபா, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.எல். ஹமீட், கல்முனை 12 ஆம் வட்டார ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம்.எஸ். பளீல், முன்னாள் வேட்பாளர் எம். ரகுமான் உட்பட பழைய மாணவர்கள் சங்கத்தினர், பாடசாலை பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# கரபந்தாட்டத்தில் சாம்பியனாக தெரிவான மாணவர்களுக்கு மாபெரும் கௌரவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

வட மாகாண பாடசாலைகளுக்கு இடையில் 18 வயதுக்கு கீழ்ப்பட்ட மாணவர் ஆண்கள் அணிகளுக்கான கரபந்தாட்டப் போட்டியில் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

அவர்களைப் பாடசாலை சமூகத்தினரும் கிராம மக்களும் ஒன்றிணைந்து கௌரவித்துள்ளனர்.

வட மாகாணத்தில் 2024 ஆம் ஆண்டு 18 வயது ஆண்களுக்கான கரபந்தாட்டப் போட்டி யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர் அணியும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மாணவர் அணியும் மோதிக் கொண்டது.

இதன்போதே மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர் அணி சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இந்த அணியின் வீரர்களாக ஆர்.மரி அன்று, ஏ.ஆகாஷ் , என்.மரிய றுசிலன், ஜே.யோசப் விஜய் , ஜே.ஜனிச சில்வா, எம்.றிஷான் மற்றும் ஜே.ஜெரோன் ஆகியோர் உள்ளனர்.

இந்த அணியினரை இவர்களின் பாடசாலை சமூகத்தினரும் கிராம மக்களும் கௌரவித்துள்ளனர்.

துள்ளுக்குடியிருப்பில் இருந்து பேசாலை ஊடாகத் திறந்த வாகனத்தில் அழைத்து வரப்பட்டு பாடசாலை மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் உதவிக் கல்விப் பணிப்பாளர் (விளையாட்டு) பி.ஞானராஜ் மற்றும் பங்கு தந்தை அருட்பணி ஞானாதிக்கம் அடிகளார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.














## பொலிஸ் நிலையத்தில் வைத்து தலித் பெண்

# சித்திரவதை!



தெலுங்கானா மாநிலம் ரங்கா ரெட்டி மாவட்டத்தில் உள்ள சாத்நகர் காவல்நிலையத்தில் திருட்டு வழக்கில் சந்தேகத்தின் அடிப்படையில் அழைத்துச் செல்லப்பட்ட தலித் பெண் ஒருவர், அடித்துச் சித்திரவதை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தங்கம் திருட்டுப்போன வழக்கில் தலித் சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை சந்தகேத்தில் அடிப்படையில் அழைத்துச் சென்ற பொலிஸார், இந்த வெறிச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் வெளிச்சத்துக்கு வந்த நிலையில் சம்பந்தப்பட்டபொலிஸாரை விசாரிக்க ஏ.சி.பி. உத்தரவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

“முதலில் அவர்கள் எனது கணவரைப் பிடித்துச் சென்று அடித்தனர். அதன்பின் அவரை வெளியில் விட்டு விட்டு என்னைப் பிடித்துச் சென்றனர்.

பொலிஸார் தங்கள் முன்னிலையில் எனது சேலையைக் கழற்றிவிட்டு ஷோர்ட்ஸ் அணியும்படி கட்டாயப் படுத்தினர்.

எனது தலைமுடியை பொலிஸ் அதிகாரி ஒருவர் பிடித்துக்கொள்ள, மற்ற இரு பொலிஸார் எனது இரண்டு கால்கள் மீது கட்டையை வைத்துத் தாக்கினர்

செய்யாத குற்றத்திற்காக என்னை அடிக்காதீர்கள் என்று நான் அவர்களிடம் கெஞ்சினேன். திருடுவதற்குப் பதிலாக நான் பிச்சையே எடுப்பேன் என்று கூறினேன். ஆனால் அவர்கள் எனது காலை உடைந்தனர்.

எனது கால் உடைந்துவிட்டது என்று வலியால் கத்தியபடி அவர்களிடம் கூறியும் அதை அவர்கள் நம்பவில்லை. இந்த நிலையில் என்னை எழுந்து நடக்கச் சொன்ன அவர்கள், அப்படிச் செய்யாவிட்டால் எனது கால்களை நிரந்தரமாக செயலிழக்கும்படி உடைப்போம் என்று மிரட்டினர்” எனத் தெரிவித்தார்.

திருட்டு வழக்கில் எப்.ஐ.ஆர் பதியாமலேயே சந்தேகத்தின் பேரில் பெண்ணை அழைத்துவந்து சட்ட விரோதமாக அடித்துத் துன்புறுத்திய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





## வேட்பாளர் விவாதத்துக்கு டிரம்ப் பின்னடிப்பு!

## கமலா ஹறிஸ் தரப்பு கடுமையான விமர்சனம்!

அமெரிக்க அதிபர் வேட்பாளர்கள் பங்கேற்பத்தாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நேரடி விவாதத்திலிருந்து பின்னடித்துள்ள டிரம்ப், வேறொரு நிகழ்வுக்கு அழைப்பு விடுத்துள்ளமைக்கு கமலா ஹாரிஸ் தரப்பு கடும் விமர்சனம் செய்துள்ளது.

அமெரிக்காவில் நவம்பர் மாதம் 5ஆம் திகதி அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் டிரம்ப், ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய துணை அதிபர் கமலா ஹறிஸ் ஆகியோர் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது.

தேர்தல் பிரசாரத்தின்போது, வேட்பாளர்கள் நேரடி விவாதங்களில் ஈடுபடுவது வழக்கம். இந்த விவாதத்தின்போது நாட்டின் முக்கிய பிரச்சினைகள் குறித்தும், ஆட்சிக்கு வந்தால் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்தும் வேட்பாளர்கள் தங்கள் கருத்தை முன்வைப்பார்கள். இதன்மூலம் மக்களின் செல்வாக்கைப் பெற முடியும்.

அதன்படி, 'ஏ.பி.சி. நியூஸ்' ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதி கமலா ஹறிஸ், டிரம்ப் பங்கேற்கும் நேரடி விவாதம் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது.ஆனால் இந்த நேரடி விவாதத்தை டிரம்ப் தவிர்த்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில்,

"செப்ரெம்பர் 10ஆம் திகதி 'ஏ.பி.சி.' செய்தி நிறுவனத்தின் எற்பாட்டில் நடத்தப்படும் விவாதத்தில் நான் கலந்து கொள்ளப் போவதில்லை. அதற்கு முன்னதாக செப்ரெம்பர் 4ஆம் திகதி 'பொக்ஸ் நியூஸ்' சார்பில் நடைபெற உள்ள விவாதத்தில் கலந்து கொள்வேன்" என்று கூறியுள்ளார்.

"பொக்ஸ் நியூஸ் விவாதத்தில் கலந்து கொள்ள, கமலா ஹறிஸ் ஒப்புக் கொள்ளாவிட்டால், அவருடன் இனி நேரடி விவாதம் நடத்தப்போவதில்லை" என்று டிரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

எனினும், டிரம்பின் இந்த மாற்று யோசனையை கமலா ஹறிஸ் நிராகரித்துள்ளார்.

"ஏ.பி.சி. நியூஸ் நடத்த உள்ள விவாதத்தில் பங்கேற்க டிரம்ப் பயப்படுகிறார். அதனால் விவாதத்தைத் தவிர்க்க முயற்சிக்கிறார்" என்று கமலா ஹறிஸின் பிரசாரக் குழு கூறியிருக்கிறது.

செப்ரெம்பர் 10ஆம் திகதி நடத்த உள்ள விவாத நிகழ்ச்சியானது, இதற்கு முன்பு போட்டியில் இருந்த பைடனும், டிரம்பும் ஒப்புக்கொள்ளப்பட்டபடி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிதான். எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் விவாதம் செய்யத் தயாராக இருக்கின்றனர் என இருவரும் கூறியிருந்தனர். தற்போது செப்ரெம்பர் 10ஆம் திகதி விவாதத்தை டிரம்ப் தவிர்த்திருப்பதை கமலா ஹறிஸ் விமர்சனம் செய்துள்ளார்.

"எந்த நேரத்திலும், எந்த இடத்திலும்" என்ற நிலைப்பாடு எப்படி "ஒரு குறிப்பிட்ட நேரம், ஒரு குறிப்பிட்ட பாதுகாப்பான இடம்" ஆக மாறியது என்பது சுவாரஸ்யமானது. டிரம்ப் ஒப்புக் கொண்டது போல் நான் செப்ரெம்பர் 10ஆம் திகதி அங்கு இருப்பேன், நான் அவரை அங்கே சந்திப்பேன் என நம்புகிறேன்" என்று கமலா ஹறிஸ் தெரிவித்தார்.

கனடா முரசு
திங்கட்கிழமை 05/08/2024

## தேடப்பட்ட சந்தேகநபர் வகையாகச் சிக்கினார்!

டொராண்டோவில் கடந்த சனிக்கிழமை இரவு கடமை நேரத்தில் இல்லாத பொலிஸ் அலுவலர் ஒருவர் 2022 ஆம் ஆண்டு முதல் கனடா முழுவதும் பிடிவிறாந்தில் தேடப்பட்டு வந்த சந்தேக C2▶

# பிரபல ஐஸ் ஹொக்கி கோல்காப்பு வீரர் உட்பட இரு இளைஞர்கள் ஒட்டாவா விபத்தில் மரணம்!




**ஒட்டாவில் இரண்டு மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரு இளைஞர்கள் விபத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.**

**ஒட்டாவாவின் 416 ஆம் மற்றும் 417 ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலையில் வெள்ளிக்கிழமை நள்ளிரவுக் குச் சற்று முன்னர் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.**

**இந்த வாகன விபத்து தொடர்பில் ஒன்றாறியோ மாகாண பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.**

சம்பவத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்த விட்டார் எனவும் படுகாயம் அடைந்த மற்றைய சைக்கிள் சாரதி வைத்தியசாலையில் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வேகமாக இந்த மோட்டார் சைக்கிள்கள் பயணித்தன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விபத்தைத் தொடர்ந்து 416 மற்றும் 417 இலக்க அதிவேக நெடுஞ்சாலைகள் மூடப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த இளைஞர்களில் ஒருவர் உள்ளூர் ஐஸ் ஹொக்கி அணியின் கோல்காப்பு வீரரான Creed Jones (வயது24) என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரின் திடீர் மறைவால் ஒட்டாவ.-காட்டினோவின்ஜுனியர்ஹொக்கி சமூகம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

ஜோன்ஸ் கியூபெக் மரிடைம்ஸ் ஜுனியர் ஹொக்கி லீக், ஒன்டாரியோ ஜுனியர் ஹொக்கி லீக் மற்றும் ஒன்டாரியோ பல்கலைக்கழக மெய் வன்மைச் சங்கத்திற்காக விளையாடி வந்தார்.

# ஒரே ஒலிம்பிக்கில் மூன்று தங்கம் வென்று ரொறன்ரோ இளம் வீராங்கனை சாதனை!

ஒலிம்பிக் போட்டித் தொடர் ஒன்றில் கனடாவின் சார்பில் மூன்று தங்கப் பதக்கம் வென்று சாதனை படைக்கப்பட்டுள்ளது.

கனடாவின் சம்மர் மெக்கினோஸ் என்ற நீச்சல் வீராங்கனையே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

இவ்வாறு மூன்று தங்கப் பதக்கங்களை எந்தவொரு கனடியரும் இதுவரையில் ஒரே ஒலிம்பிக் தொடரில் வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

200 மீற்றர் மெட்லே, 200 மீற்றர் பட்டர்பிளை மற்றும் 400 மீற்றர் மெட்லெ ஆகிய நீச்சல் போட்டிகளில் சம்மர் தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.

ரொறன்ரோவைச் சேர்ந்த சம்மர் 17 வயதான சிறுமி என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவிற்கு பெரும் சேர்க்க முடிந்தமை மகிழ்ச்சியளிப்பதாக சம்மர் தெரிவித்துள்ளார்.







# சம்மட்டி எறிதலில் கனடாவுக்கு இப்போதுதான் முதல் தங்கம்!

ஒலிம்பிக் சம்மட்டி எறிதலில் முதல் தங்கப் பதக்கத்தை கனடா வென்றுள்ளது.

பாரிஸில் ஒலிம்பிக்கில் சம்மட்டி எறிதலில் ஈதன் காட்ஸ்பெர்க் தங்கம் வென்றார்.

அதே நேரத்தில் வியாட் சான்ஃபோர்ட் 1996 க்குப் பிறகு நாட்டின் முதல் குத்துச்சண்டைப் பதக்கத்தைப் பெற்றார்.

இதன் மூலம் 5 தங்கம், 4 வெள்ளி, 8 வெண்கலம் என மொத்தம் 17 பதக்கங்களை கனடா பெற்றுள்ளது. ஒலிம்பிக்கின் ஒன்பது முழு நான்கள் போட்டியிலும் குறைந்தது ஒரு கனேடிய வீரராவது வெற்றி மேடையை அனங்கரிந்துள்ளார். இது நாட்டின் மிக நீண்ட பதக்கத் தொடருடன் பொருந்துவது குறிப்பிடத்தக்கது.



## தேடப்பட்ட...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நபர் ஒருவரைக் அடையாளம் கண்டமையை அடுத்து அவரைக் கைது செய்ய முயன்ற சமயம் அந்த நபரினால் சுடப்பட்டு காயமடைந்தார்.

சனிக்கிழமை இரவு 11:30 மணியளவில் கிங் ஸ்ட்ரீட் வெஸ்ட் மற்றும் பாதர்ஸ்ட் ஸ்ட்ரீட் பகுதியில் தாம் கடமையில் இல்லாத சமயத்தில் இந்த அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவரை அடையாளம் கண்டுகொண்டார். அதிகாரி பின்னர் பணியில் இருந்த அதிகாரிகளை எச்சரித்து, தப்பியோட சென்ற சந்தேக நபரை அணுகினார்.

"ஒரு சிறிய தூரத்துக்கு துரத்தல் நடந்தது. இதன் போது குற்றம் சாட்டப்பட்டவர் கடமையில் இல்லாத அந்த அதிகாரியின் காலில் சுட்டார். அந்த நேரத்தில், குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டார்" என றொறொன்ரோ பொலிஸ் படுகொலை மற்றும் காணாமல் போனோர் பிரிவு அதிகாரியான துப்பறி வாளர் எஸ்.டி.ஜி. பிராண்டன் பிரைஸ் கூறினார்.

"அதிகாரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார், அங்கு அவரது காயங்கள் உயிருக்கு ஆபத்தானதாக கருதப்பட வில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அவர் விடுவிக்கப்பட்டு வீட்டில் குணமடைந்து வருகிறார்.




# கனடாவில் காட்டுத் தீயை அணைக்க சென்றவர் மரம் வீழ்ந்து மரணமானார்

கனடாவின் கல்கரியில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்கு உதவிய நபர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

ஜாஸ்பர் பகுதியில் பாரியளவு காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது.

இந்தக் காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்கு உதவிய நபர் ஒருவர் மரம் விழுந்து உயிரிழந்துள்ளார்.

24 வயதான நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த இந்நபர் ஸ்டார்ஸ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர் கல்கரி பகுதியைச் சேர்ந்தவர் என்றும், தீயணைப்பு பிரிவை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





# காட்டுத் தீயில் உயிரிழந்த வீரரின் குடும்பத்திற்கு பிரதமர் இரங்கல்

கல்கரி ஜஸ்பர் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்த தீயணைப்புப் படை வீரரது குடும்பத்திற்கு கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இரங்கல் வெளியிட்டுள்ளார்.

ஜஸ்பர் காட்டுத் தீயை கட்டுப்படுத்த போராடி உயிரை தியாகம் செய்த படை வீரர் குறித்த செய்தி மனதை நெகிழச் செய்தது என அவர் தெரிவித்துள்ளார்

தனது அதிகாரபூர்வ டுவிட்டர் கணக்கில் இந்த விபத்து தொடர்பில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அல்பேட்டா மக்களுக்காக மிகுந்த மன தைரியத்துடன் போராடிய ஒருவரை இழந்து விட்டோம் எனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த சம்பவத்தில் உயிரிழந்த தீயணைப்புப் படைவீரருக்கு தீயணைப்புப் படைவீரர்கள் பாதையின் இரு மருங்கிலும் நின்று தங்களது அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

தீயணைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது மரம் முறிந்து வீழ்ந்து இந்நபர் உயிரிழந்தார்.





# நடப்புச் சாம்பியன்களான கனடாவின் மகளிர் அணி உதைபந்தாட்டத்தில் காலிறுதியில் வெளியேற்றம்!

கனடிய மகளிர் உதைபந்தாட்ட அணி ஒலிம்பிக் போட்டித் தொடரில் தோல்வியைத் தழுவியுள்ளது.

நடப்பு ஒலிம்பிக் சாம்பியன்களாக திகழ்ந்த கனடிய அணி காலிறுதிச் சுற்றில் தோல்வியைத் தழுவியது.

ஜேர்மனி அணிக்கு எதிரான காலிறுதிப் போட்டியில் எதிர்பாராதவிதமாக கனடா தோல்வியடைந்து சுற்றிலிருந்து வெளியேறியது.

பாரிஸில் நடைபெற்ற இந்தப் போட்டியின் ஆட்ட நேரத்திலும் மேலதிக நேரத்திலும் இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை.

பின்னர் வெற்றியை நிர்ணயம் செய்வதற்காக பெனல்டி உதை நடத்தப்பட்டது.

இதில் ஜெர்மனி அணி நான்குக்கு இரண்டு என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

ஏனைய அணிகள் பயிற்சியில் ஈடுபடுவதனை ட்ரோன் மூலம் உளவு பார்த்ததாக கனடா அணி மீது குற்றம் சுமத்தப்பட்ட நிலையில், கனடா இந்தப் போட்டித் தொடரிலிருந்து காலிறுதிச் சுற்றுடன் வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஒன்றாரியோ மாகாணம் லண்டன் தேம்ஸ் நதியில் காணாமல் போன 7 வயதுச் சிறுமி சடலமாக மீட்பு

கனடாவில் நதி ஒன்றில் காணாமல் போயிருந்த ஏழு வயது சிறுமியொருவர் மூன்று நாள்களின் பின்னர் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றாரியோ மாகாணம் லண்டன் தேம்ஸ் நதியில் இந்த சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை குறித்த சிறுமி காணாமல் போயிருந்தார்.

லண்டன் பகுதி பொலிஸாரும், தீயணைப்புப் படையினரும் கூட்டாக இணைந்து சிறுமியை தேடும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

7 வயதான என்னா பெய்லி என்ற சிறுமியை சுமார் 150 க்கும் மேற்பட்டவர்கள் தேடிவந்த நிலையில், சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஹெலிக்கொப்டர்களும் இந்த தேடுதலின் போது பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்த சிறுமியின் மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# கனடாவிலிருந்து இந்தியாவுக்கு காரிலேயே பயணித்து வந்தவர்!

## நாற்பது நாள்களும் தூக்கம் காருக்குள்தான்

நீண்ட தூர சாரத்தியம் பெரும்பாலும் பலருக்கும் பிடிக்கும். நம்மில் பலரும் இயற்கை காட்சிகளை ரசித்தபடி நீண்ட தூரம் காரிலோ அல்லது பைக்கிலோ பயணிக்க விரும்புவோம்.

ஆனால் நிஜத்தில் தூரப் பயணம் செய்வதாக இருந்தால் பஸ்ஸிலும் ரயிலிலும், விமானத்திலும் தான் செல்கிறோம்.

இதுவே வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், விமானத்தில் மட்டுமே செல்ல முடியும்.

ஆனால் கனடாவைச் சேர்ந்த கார் ஆர்வலர் ஒருவர், தனது SUV காரை கனடாவில் இருந்து இந்தியா வரை 19,000 கி.மீ தூரம் ஓட்டி வந்துள்ளார். அவர் இந்தியாவை அடைய சுமார் 40 நாள்கள் ஆகியுள்ளது. இந்த நம்ப முடியாத காரியத்தைச் செய்துள்ள சாதனை நபரின் பெயர் என்ன தெரியுமா? ஜஸ்மீத் சிங் சாஹ்னி.

ஜஸ்மீத் தனது ஃபோர்டு பிரான்கோ (Ford Bronco) SUV காரை ஓட்டிக்கொண்டு கனடாவில் இருந்து இந்தியாவுக்கு புறப்பட்டார். அவர் தனது இறுதி இலக்கை அடைவதற்கு முன்பு 18 நாடுகளை சுற்றி வந்துள்ளார். இந்தப் பயணத்தின் போது, ஹோட்டல்கள் எதிலும் தங்காமல் தனது SUV காரில் தான் தூங்கியுள்ளார். இந்தப் பயணத்திற்காக மட்டுமே ரூ.25 லட்சத்திற்கும் மேல் செலவு செய்துள்ள அவர் இதற்காக இரண்டரை வருடங்கள் திட்டமிட்டுள்ளார். இன்று தனது வித்தியாசமான மற்றும் தனித்துவமான பயண முறையால் உலகம் முழுவதும் பிரபலமான மனிதராக மாறிப்போனார்.

இந்தப் பயணம் எப்படி சாத்தியமானது? கனடா நாட்டின் டொராண்டோ நகரில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்த ஜஸ்மீத், அங்கிருந்து 2200 கி.மீ தூரம் பயணம் செய்து ஹாலிஃபாக்ஸ் என்ற இடத்தை சென்றடைந்தார். அதன்பிறகு இங்கிலாந்து நாட்டிற்கு செல்ல வேண்டுமென்றால் அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்தாக வேண்டும். இதற்கு அவர் ஒரு கப்பலில் செல்ல வேண்டியிருந்தது. பின்னர் இங்கிலாந்தில் இருந்து ஐரோப்பாவில் உள்ள பிரான்ஸ் நாட்டிற்கு படகு மூலம் சென்றார். இப்படியே அவர் கொஞ்சம் கொஞ்சமாக தனது காரில் பெரும்பாலான தூரத்தைக் கடந்தார்.

இந்தியாவிற்குள் பாகிஸ்தான் வழியாகவே நுழைந்தார். பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் அருகே உள்ள அட்டாரி பாக் எல்லையில் அவரது குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடி ஜஸ்மீத்தை வரவேற்றனர். மிகப்பெரும் கார் ஆர்வலரான ஜஸ்மீத்திற்கு, அமெரிக்க கார்கள் மீது எப்போதுமே கொள்ளைப் ப்ரியம். இவரது SUV காரான Ford Bronco அமெரிக்கா மற்றும் கனடாவில் மிகவும் பிரபலமான ஓவ்-ரோட் கார்களில் ஒன்றாகும். தனது அசாத்தியமான பயணம் குறித்து கடந்த வருடம் டினன்ஏ இந்தியா செய்தி தளத்திற்கு ஜஸ்மீத் பேட்டியும் அளித்துள்ளார்.







# கனடாவில் குழந்தை பெற்ற திருநங்கை!

செயின்ட் ஜோன்ஸ் பகுதியைச் சேர்ந்த ஃபாரெஸ்ட் சாண்டிஃபர் ஆணாக மாறிய ஒரு திருநங்கை.

கடந்த ஆண்டு, உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவருக்கு வயிற்றில் பிரச்சினைகள் இருந்தன. பல மருத்துவர்களைப் பார்வையிட்ட பிறகும் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

இரத்த ஆய்வு மற்றும் பிற சோதனைகளுக்குப் பிறகு, அவரது மருத்துவர் சிலர் மிகவும் பீதியான ஒரு விடயம் பற்றிப் பேசத் தொடங்கினர். அது – புற்றுநோய். குறிப்பாக, பிட்யூட்டரி சுரப்பி கட்டி.

மேலும் சோதனை மற்றும் ஒரு ஆசுஜ ஸ்கான் திட்டமிடப்பட்டது.

ஆனால் 27 வயது இளைஞனுக்கு (திரு நங்கைக்கு) ஒரு குடல் உணர்வு இருந்தது.

மருத்துவர்களின் அடுத்த சந்திப்புகளுக்காக அவர் காத்திருந்தபோது, அவர் வீட்டில் மேலும் இரண்டு சோதனைகளை மேற்கொண்டார், மேலும் மர்மம் தீர்க்கப்பட்டது.

கட்டியே இல்லை அவர் கர்ப்பமாக இருந்தார்.

சாண்டிஃபரின் மருத்துவர் அவரது கர்ப்பத்தை உறுதிப்படுத்தியபோது, அவர் அவரிடம் “இது கூட சாத்தியம் என்று நான் நினைக்கவில்லை.. – என்றார்.

திருநங்கையான சாண்டிஃபர் எப்பொழுதும் குழந்தைகளை விரும்புவார், ஆனால் தத்தெடுப்பதே தனது ஒரே வழி என்று நினைத்தார். அவர் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக டெஸ்டோஸ்டிரோனில் இருந்ததால், அவருக்கு எட்டு ஆண்டுகளாக மாதவிடாய் ஏற்படவில்லை மற்றும் ஒரே ஒரு பக்கத்தில் கருப்பை இருந்தது.

அவர் கருத்தரிக்கும் வாய்ப்பு 1.8 சதவீதத்திற்கும் குறைவாக இருப்பதாக அவரது மருத்துவர் கூறினார்.

அனால் அவருடைய மகன் லூபின் ஆகஸ்ட் 19, 2023 அன்று பிறந்தார்.

அவர் கர்ப்பம் அடையும் வரை தாம் ஒரு குழந்தையை சுமக்க முடியும் என்று சாண்டிஃபருக்கு தெரியாது. அதனால் ஆண்களுக்கான கர்ப்பம் பற்றி அடிக்கடி பேச வேண்டும் என்றும், உயிரியல் குழந்தையை சுமப்பது கனவு என்றால், அது சாத்தியம் என்றும் அவர் கூறுகிறார்.

“நான் கர்ப்பமாக இருப்பதை அறிந்ததும், நான் பல விஷயங்களைப் பார்க்க வேண்டியிருந்தது, ஆனால் அது பற்றிய அதிக தகவல்கள் இல்லை” என்று அவர் கூறினார்.

“எனவே, அதைப் பற்றி யோசிக்கும் அல்லது யோசிக்கும் யாருக்கும் நான் உதவ முடிந்தால், நான் நிச்சயமாக அதைச் செய்ய விரும்புகிறேன்.” – என்றார் அவர்.

தாம் கர்ப்பமாக இருக்கின்றார் என்பதை அறிந்த கணம் சாண்டிஃபர. அதிர்ச்சியில் திகைத்துப் போனார். அவருக்கு உலகமே – எல்லாமுமே – கறுப்பாகிவிட்டது.

“எனக்கு நொக் அவுட் ஆன மாதிரி இருக்கு” என்றார்.

அவருக்கும் அவரது கூட்டாளியான பிரானுக்கும் ஆரம்ப அதிர்ச்சி நீங்கிய பிறகு, தம்பதியினர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர்.



# சில்கோடின் நதி பெருக்கெடுக்கும்?

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சில் கோடின் நதியின் ஓட்டத்தைத் தடுக்கும் விதத்தில் நிலச்சரிவால் தற்போது ஏற்பட்டுள்ள தடையை உடைத்துக் கொண்டு நீரோட்டம் பிரவாகம் எடுத்து ஓடத் தொடங்கும் என்று பிரிட்டிஷ் கொலம் பியாவின் அவசரகால மேலாண்மை அமைச்சகம் கூறுகின்றது.

கடந்த புதன்கிழமை, சில்கோடின் ஆற்றில் ஒரே இரவில் ஏற்பட்ட நிலச் சரிவு, ஆற்றின் குறுக்கே சுமார் 600 மீட்டர் அகலமும் 30 மீற்றர் உயரமும் கொண்ட அணையை உருவாக்கியது. பல நாள்களாக நிலச்சரிவுக்கு பின்னால் மரங்கள் விழுந்தது போல் குப்பைகளும், தண்ணீரும் தேங்கி நிற்கின்றன.

இதையடுத்து அணை உடைந்து விடும் என அதிகாரிகள் எச்சரித் துள்ளனர்.

சில்கோடின் ஆற்றின் குறுக்கே சுமார் 100 சதுர கிலோமீட்டர் நிலப்பகு திக்கு வெளியேற்ற உத்தரவுகள் நடை முறையில் உள்ளன. இது பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஹான்ஸ்வில்லே அதிகாரிகளின் கூற்றுப்படி, 13 குடியிருப் பாளர்களையும், சுமார் 2,500 கால் நடைகளையும் இந்த உத்தரவு பாதிக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை இரவு, கரிபூ பிராந்திய மாவட்ட அவசர நடவடிக்கை மையம் (EOC) சில்கோடின் மற்றும் ஃப்ரேசர் நதிகளின் சங்கமத்திற்கு தெற்கே சுமார் 9.62 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் எட்டு பிரிவுகளைகளை வெளியேற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சுர்ன் க்ரீக் பாலம் பகுதியில் சுமார் 1.57 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் உள்ள இரண்டு பிரிவுகளைகளை வெளியேற் றும் உத்தரவும் உள்ளது.

ஆற்றங்கரைகளில் இருந்து விலகி இருங்கள் என்று மக்களை அதிகாரி எச்சரித்துள்ளனர்.

பிராந்திய மாவட்ட தகவல் அதிகாரி ஜெரால்ட் பிஞ்ச்பெக் கூறுகையில் –

"நிலச்சரிவில் இருந்து வெள்ளம் மற்றும் குப்பைகள் எதிர்பார்க்கப் படுகின்றன. ஃப்ரேசர் நதி மற்றும் அருகிலுள்ள ஆற்றங்கரைகளில் இருந்து விலகி இருக்குமாறு உள்ளூர் மக்களை வலியுறுத்துகிறோம்.

"அகற்றப்பட்ட மரங்கள், மரக் கட் டைகள் மற்றும் பிற மரப்பொருள்களை இந்த குப்பைகள் உள்ளடக்கும்,.அவை ஆற்றில் மக்களுக்கும் மற்றும் உள்கட் டமைப்பிற்கும் ஆபத்தை உருவாக்கக் கூடியவை" என்று அவர் கூறினார்.

"இப்போது மிகவும் முக்கியமான விஷயம் என்னவென்றால், மக்கள் நதி மற்றும் ஆற்றங்கரைகளில் இருந்து விலகி இருப்பதுதான். இது ஒரு வர லாற்று சரிவு, வரலாற்று ரீதியிலான நீரின் வெளியீடு, இது வரலாற்று விளைவுக ளுடன் வருகிறது." – என்றார் அவர்.

